பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 08 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. காபி ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தீவிரவாதத்திற்கு ஆதரவு அளித்து வருவதை பாகிஸ்தான் நிறுத்தவில்லை என்று மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது.

3. மருத்துவக்கல்விக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

4. மின்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென இந்தியாவும் — இலங்கையும் முடிவு செய்துள்ளன.

5. ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>>>

காபி ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழ் ஒன்றில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

கடந்த நிதியாண்டில் 140-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு காபி ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், வாகனங்கள் விற்பனையும் கடந்த மாதம் இதுவரை இல்லாத அளவிற்கு அதிரித்துள்ளதாகவும், ஊரகப்பகுதிகளிலும் விற்பனை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் திரு நரேந்திர மோடி மற்றொரு பதிவில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>>>

தீவிரவாதத்திற்கு ஆதரவு அளித்து வருவதை பாகிஸ்தான் நிறுத்தவில்லை என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், தீவிரவாத செயல்களுக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ளாதவரை அந்நாட்டுடனான நல்லுறவில் முன்னேற்றம் காண முடியாது என்று குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தை அரசு கொள்கையாக பாகிஸ்தான் கடைபிடித்து வருவதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<<>>>>>>>>

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வந்தபோதிலும், இரு அவைகளிலும் முக்கிய அலுவல்கள் நடைபெற்று வருவதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறு-குறு தொழில்துறைக்கான மேம்பாட்டு மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியதை சுட்டிக்காட்டினார்.

இம்மசோதா தொடர்பான விவாதம் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக பாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மழைக்கால கூட்டத்தொடரை நீட்டிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெறக்கூடாது என்ற நோக்கில் எதிர்க்கட்சிகள் செயல்படுவதாகவும் திரு கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>>>

ஐ நா பாதுகாப்புக்குழு விரிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இந்த குழுவில் வளரும் நாடுகளுக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஐ நா பாதுகாப்புக்குழுவில் நிரந்தர உறுப்பினராவதற்கான அனைத்து தகுதிகளையும் இந்தியா கொண்டுள்ளது என்றும் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>>

மருத்துவக்கல்விக்கான கட்டமைப்பு தொடர்ந்து வலுப்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனைதெரிவித்த அவர், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கை **118** புள்ளி ஆறு சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார்.

**2014-**ஆம் ஆண்டுக்கு முன்னர் **387** மருத்துவக்கல்லூரிகள் மட்டுமே செயல்பட்டுவந்த தாகவும் தற்போது இந்த எண்ணிக்கை **846-**ஆக அதிகரித்துள்ளதாகவம் அவர் கூறினார்.

இந்த காலக்கட்டத்தில், இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான இடங்களும் **51** ஆயிரத்து **348** என்ற நிலையிலிருந்து, ஒரு லட்சத்து

**39** ஆயிரத்து **864-**ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>>

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் காங்கிரஸ் உறுப்பினர்கள் வரும் திங்கட்கிழமை தொடங்கி, புதன் கிழமை வரை தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று அக்கட்சி கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களும் பங்கேற்பதை உறுதி செய்யுமாறு காங்கிரஸ் சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வெளிநாட்டு நன்கொடை திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் காங்கிரஸ் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளது.

தொகுதி மறுவரையறை தொடர்பான அரசியல் சாசன திருத்த மசோதாவும் கொண்டுவரப்படக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் காங்கிரஸ் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>>>

கல்வி கட்டமைப்பை வலுப்படுத்தவதற்கு புதுமை கண்டுபிடிப்புகள் அவசியமாகிறது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

ஒடிஷா மாநிலம் புவனேஷ்வரில் பிரிக்ஸ் கல்வி அமைச்சர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

எதிர்கால சந்ததியினரின் எண்ணங்களை பூர்த்தி செய்வதற்கு இந்த நடவடிக்கை அவசியமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக பிரிக்ஸ் நாடுகளுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாகவம் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

பிரிக்ஸ் கல்வி அமைச்சர்களின் பிரகடனமும் இக்கூட்டத்திற்கு பின்னர் வெளியிடப்பட்டது.

<<<<<>>>>>>>>>

காற்று மாசினை கட்டுப்படுத்துவது தொடர்பான மத்திய அரசின் பரிந்துரைகளை ஹரியானா அரசு நிறைவேற்றி வருவதாக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

ஹரியானாவின் **Manesar-**ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், சுற்றுச்சூழலை பாதுகாக்க மத்திய அரசு

பல்வேறு பரிந்துரைகளை ஹரியானா அரசுக்கு வழங்கியதாக தெரிவித்தார்.

இதனை ஹரியானா அரசு சிறப்பாக நிறைவேற்றி வருவதாகவும் அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

<<<<<>>>>>>>>

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கான வீரர்களை தேர்வு செய்யும் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை முழுமையாக உறுதி செய்யப்படும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய விளையாட்டு சம்மேளனத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கான வீரர்களை தேர்வு செய்யும் நடைமுறைகள் கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>>>

தேர்தல் தொடர்பான நிர்வாகத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென இந்தியாவும் — மங்கோலியாவும் முடிவு செய்துள்ளன.

இன்று புதுதில்லியில் இந்தியாவிற்கான மங்கோலிய தூதர் திரு **Ulziit Luvsanjav,** தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyaneshkumar-**ஐ சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது, தேர்தல் நிர்வாகம் தொடர்பான அனைத்து அம்சங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதேபோல், இந்தியாவிற்கான கஜகஸ்தான் தூதர் திரு **Azamat Yeskarayed-**ம், தலைமை தேர்தல் ஆணையரை சந்தித்து பேசியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>>

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் குஜராத் முதலிடத்தில் உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு புபேந்திர பட்டேல் கூறியுள்ளார்.

அம்மாநிலத்தில் உள்ள சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டுக்கான முனையமாக குஜராத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு புபேந்திர பட்டேல் கூறினார்.

<<<<<>>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக மகாராஷ்ட்ரா துணை முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசு இளையோர் நலனுக்கு எதிராக உள்ளது என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு தவறானது என்றார்.

இளையோர் நலனுக்கு பிரதமர் கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை என்றும் திரு ஏக்நாத் ஷிண்டே குறை கூறினார்.

<<<<<>>>>>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவையில் பணி நியமன முறைகேடுகள் பிரச்சினையை எழுப்பி பிஜேபி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக அவை நடவடிக்கைகள் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

இன்று பேரவை கூடியதும் பிஜேபி உறுப்பினர்கள் இப்பிரச்சினையை எழுப்பி இதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

இப்பிரச்சினை குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இதன்காரணமாக கூச்சல், குழப்பம் நிலவியதால் பேரவை நடவடிக்கைகள் முதலில் நண்பகல் 12 மணிவரையும், பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

<<<<<>>>>>>>>>

ஆந்திராவில் பாதசாரிகள் பாதுகாப்பு கொள்கைக்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அமராவதியில் முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>>>>

மின்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென இந்தியாவும் — இலங்கையும் முடிவு செய்துள்ளன.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா - இலங்கை மின்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் மற்றும் இலங்கை மின்துறை அமைச்சர் திரு **Anura Karunathilake** தலைமையிலான குழுவினர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கம் அளிப்பது குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<<>>>>>>>>>

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

உஸ்பெகிஸ்தானின் **Tashkent**-ல் இன்று தொடங்கிய இப்போட்டியின் மகளிர் **65** கிலோ எடைப்பிரிவில் **Parishmita Gogoi** தங்கப்பதக்கம் வென்றார்.

**Titli Maji** இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

---------------

கொழும்பில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான மூன்று நாள் பயிற்சி கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இலங்கை **Eleven** அணி, முதல் இன்னிங்சில் **8** விக்கெட் இழப்பிற்கு **363** ரன் எடுத்துள்ளது.

----------------

இணையம் வாயிலாக நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் **Pranesh** பட்டம் வென்றார்.

----------------

தேசிய ஈட்டி எறிதல் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

**<<<<<END>>>>>>>>>**